


**பரிசுத்த வேதாகமத்தின் (பைபிள்) பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களில் இயேசு கிறிஸ்துவைக் குறித்து கூறப்பட்ட 332 தீர்க்கதரிசனங்கள் நிறைவேறினதாக வேத ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகிறார்கள். இன்னும் நிறைவேற வேண்டிய தீர்க்க தரினங்கள் காத்திருக்கின்றன.**

**இந்த பூமியில் பிறந்த வேறெந்த மகான்களுக்கும், அவதாரங்களுக்கும் சொல்லப்படாத அளவில் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு மட்டுமே, அவருடைய பிறப்பு, வளர்ப்பு, ஊழியம், மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் பற்றியெல்லாம் முன்கூட்டியே தீர்க்கதரிசனங்களாக உரைக்கப்பட்டு அவைகள் நிறைவேறியிருக்கிறது. இன்னும் நிறைவேறப்போகிறது.**

**நிறைவேறின தீர்க்கதரிசன வரிசையில் "18 மணி நேரத்திற்குள்ளாக" இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தோடு தொடர்புடையதும், நிறைவேறினதுமான தீர்க்கதரிசனங்கள் குறித்து இந்த சிறு புத்தகம் மூலமாக உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.**

**அன்புடன் உங்கள் சகோதரன்.**
**பால் பிரபாகர்.**
**உன்னதமான தேவனுடைய ஊழியன்.**
**செல்பேசி: +91 9880312231.**
**www.facebook.com/paulprabha**
**பெங்களூர்.**

**இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தோடு தொடர்புடைய பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட தீர்க்க தரிசனங்கள், புதிய ஏற்பாட்டில் எப்படியாக நிறைவேறினது என்று பார்க்கலாம்.**

1. என் அப்பம் புசித்தவனே என்னை காட்டிக் கொடுப்பான். (சங் 41:9)
**நிறைவேறினது:** மத்தேயு 10:4, 26:49,50

2. முப்பது வெள்ளிக் காசுக்கு விற்கப்படுவார் (சகரியா 11:12,13)
**நிறைவேறினது:** மத்தேயு 26:15

3. அந்த முப்பது வெள்ளிக் காசும் தேவாலயத்தில் எறியப்படும் (சகரியா 11:13)
**நிறைவேறினது:** மத்தேயு 27:5

4. அந்த முப்பது வெள்ளிக் காசினால் குயவன் நிலத்தை வாங்குவர். (சகரியா 11:13)
**நிறைவேறினது:** மத்தேயு 27:7

5. இயேசுவின் சீடர்கள் சிதறிப் போனார்கள்.(சகரியா 13:7 )
**நிறைவேறினது:** மாற்கு 14:50

6. பொய்க் குற்றம் சாட்டப்படுவார் (சங்கீதம் 35:11)
**நிறைவேறினது:** மத்தேயு 26:59,60

7. குற்றம் சாட்டப்படும் போது மௌனமாக இருப்பார் (ஏசாயா 53:7)
**நிறைவேறினது:** மத்தேயு 27:12

8. காயப்படுத்தப்படுவார் (ஏசாயா 53:5)
**நிறைவேறினது:** மத்தேயு 27:6

9. அடிக்கப்படுவார், துப்பப்படுவார் (சங்கீதம் 50:6)
**நிறைவேறினது:** மத்தேயு 26:67

10. கன்னத்தில் அடிக்கப்படுவார் (மீகா 5:1)
**நிறைவேறினது:** மாற்கு 14:65

11. பரிகாசம் பண்ணப்படுவார். (சங்கீதம் 22:7,8)
**நிறைவேறினது:** மத்தேயு 27:31

12. கரங்கள் துளைக்கப்படும் (சங் 22:16; சகரியா. 12:10)
**நிறைவேறினது:** லூக்கா 23:33

13. அக்கிரமக்காரருடன் தீர்ப்பிடப்படுவார். (ஏசாயா 53:12)
**நிறைவேறினது:** மத்தேயு 27:36

14. அக்கிரமக்காரருக்காகவும் வேண்டுதல் செய்வார் (ஏசா 53:12)
**நிறைவேறினது:** லூக்கா 23:34

15. சொந்த மக்களால் கைவிடப்படுவார் (ஏசாயா 53:3)
**நிறைவேறினது:** யோவான் 7:5,48

16. காரணமின்றி பகைக்கப்படுவார் (சங்கீதம் 69:4)
**நிறைவேறினது:** யோவான் 15:25

17. நண்பர்கள் தூரமாவார்கள் (சங்கீதம் 38:11)
**நிறைவேறினது:** லூக்கா 23:49

18. மக்கள் தலைகளைத் துலுக்குவர். (சங்கீதம் 109:25)
**நிறைவேறினது:** மத்தேயு 27:39

19. அவர்கள் நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பர். (சங் 22:17)
**நிறைவேறினது:** லூக்கா 23:35

20. உடைக்காக சீட்டுப் போடுவார்கள். (சங்கீதம் 22:18)
**நிறைவேறினது:** யோவான் 19:23,24

21. தாகமாயிருப்பார். (சங்கீதம் 69:21)
**நிறைவேறினது:** யோவான் 19:28

22. காடியைக் குடிக்க கொடுப்பார்கள். (சங்கீதம் 69:21)
**நிறைவேறினது:** மத்தேயு 27:34

23. அவரது கதறல் கேட்கப்படவில்லை. (சங்கீதம் 22:1)
**நிறைவேறினது:** மத்தேயு 27:46

24. பிதாவிடத்தில் தமது ஆவியை ஒப்படைப்பார். ( சங்கீதம் 31:5)
**நிறைவேறினது:** லூக்கா 23:46

25. எலும்புகள் முறிக்கப்படாது.
(சங்கீதம் 34:20)
**நிறைவேறினது:** யோவான் 19:33

26. இருதயம் உடைந்தவராவார்.
(சங்கீதம் 22:14 )
**நிறைவேறினது:** யோவான் 19:34

27. குத்தப்படுவார். (சகரியா 12:10)
**நிறைவேறினது:** யோவான் 19:34

28. அந்தகாரம் தோன்றும்.
(ஆமோஸ் 8:9)
**நிறைவேறினது:** மத்தேயு 27:45

29. ஐசுவரியவானாக அடக்கம் பண்ணப்படுவார் (ஏசாயா. 53:9)
**நிறைவேறினது:** மத்தேயு 27:57-60.

30. புறக்கணிக்கப்பட்ட மூலைக்கல்லானார் (சங்கீதம் 118:22,23;)
**நிறைவேறினது:** மத்தேயு 21:42; அப்போஸ்தலர் நடபடிகள் 4:11; ரோமர் 9:32,33.

---

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் ஏதோ தற்செயலாக நடைபெற்றதல்ல. பரலோக பிதாவாகிய தேவன் இரட்சிப்பின் திட்டத்தையும், தீர்மானத்தையும், தமது குமாரனாகிய கிறிஸ்து இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலமாக செயல் படுத்திப் பாவிகளை மீட்டு இரட்சித்தார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் பாடுபட்டார். நாம் இயேசுவைப் பார்த்து பரிதாபப்பட வேண்டும் என்பதற்காக பாடுபடவில்லை. நாம் பாவத்தினால் நரகத்தில் வேதனைபடாமல் தப்பிக்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்தினார். இயேசுவை ஏற்றுக்கொள்வோர் தப்பிக்கக் கூடும்.

சற்று விளக்கமாக பார்ப்போம் : மனிதர்கள் பாவத்தில் வாழ்ந்த போதும் அதைப் பாவம் என அறியாதவர்களாய், வாழ்ந்து வந்தனர். பாவத்துடன் வாழ்கிற எவரும் பரம தேவனிடம் நெருங்க முடியாது. காரணம் பரிசுத்தமில்லாமல் ஒருவனும் என்னிடம் வாரன் என்பது கர்த்தரின் வாக்கு. பாவ மானிடரை மீட்கும்படியா - கவும், தேவனோடு மனிதனை ஒப்புரவாக்க

தனது எல்லாவிதமான மேன்மையையும் நமக்காக துறந்து, இந்த பூமியிலே மனிதாகப் பிறந்து, எல்லாவிதங்களிலும் நம்மைப்போலவே இருந்த கிறிஸ்து இயேசு

“என்னிடம் பாவம் உண்டு என்று உங்களில் யாராவது என்மேல் குற்றம் சுமத்த முடியுமா?” (யோவா.8:48) என்று சவால்விடுத்தார், அனைத்து மனிதர்களின் சுகவாழ்வை விரும்பினபடியால் தான், ஏராளமான மனிதர்களின் கட்டுகளை நீக்கி, வியாதிகளை சுகமாக்கி, பிசாசுகளைத் துரத்தி, இயேசு கிறிஸ்து நம்மை மீட்கும் பொருளாக தம்மையே முழுமையாக கொடுத்ததுதான் சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதல்.

**இயேசுவின் சிலுவை மரணத்தை தியானிப்பதால், நமக்கு தெய்வீக மாற்றம், தெய்வீக பெலன் உண்டாகும். கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் ஆசீர்வதித்து காப்பாராக.**





அன்புடன் உங்கள் சகோதரன்.
பால் பிரபாகர்.
உன்னதமான தேவனுடைய ஊழியன்.
செல்பேசி: +91 9880312231.
www.facebook.com/paulprabha